செய்தி வெளியீடு எண்:28 நாள்: 16.09.2019.

**தேனி மாவட்டம்**
**உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு**
**விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியினை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**துவக்கி வைத்தார்:-**

தேனி பழைய பேருந்து நிலையத்தில் அரசு மனநல மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மறுவாழ்வு மையத்தின் சார்பில் உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.09.2019) துவக்கி வைத்தார்.

கலைநிகழ்ச்சியினை துவக்கி வைத்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

உலக முழுவதும் ஆண்டுதோறும் செப்டம்பர் 10-ஆம் நாள் உலக தற்கொலை தடுப்பு தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. உலக அளவில் இருக்கும் இளைஞர்கள் மரணத்தில் 3-வது இடத்தில் இருப்பது தற்கொலை இறப்புகள் தான். ஒரு வருடத்தில் 10 லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். 40 நொடிக்கு ஒரு தற்கொலை மரணம் ஏற்படுகிறது. இந்த தினத்தின் நோக்கம் தற்கொலைக் முயற்சி செய்பவர்களை தடுப்பதற்கு பல்வேறு நிகழ்ச்சியின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

நமது மாவட்டத்தில் தற்கொலை தடுப்பு மையம் அரசு தேனி மருத்துவக்கல்லூரியின் கீழ் அரசு மனநல மருத்துவ ஆராய்ச்சி நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம் தேனி சமதர்மபுரத்தில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையில் அனைத்து மனநலப் பிரச்சனைகளுக்கான வெளிநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் பிரிவுகள் செயல்பட்டு வருகிறது. மேலும், முதியோர் மனநலப்பிரிவு, குழந்தைகள் / வளர் இளம் பருவ உளவியல் பிரிவு, குடி, போதை மருத்து மறுவாழ்வு சிகிச்சைப் பிரிவு, தற்கொலை தடுப்பு பிரிவு, குடும்ப நல ஆலோசனைப் பிரிவு ஆகிய சிறப்பு பிரிவுகள் செயல்பட்டு வருகிறது.

மனப்பதட்டம், மன அழுத்தம், மனச்சோர்வு, மனக்கவலை, குடி, கஞ்சா மற்றும் போதை மருந்துகளுக்கு அடிமையாகுதல், மனக்குழப்பம், மனச்சிதைவு, சந்கேநோய், அதீத கோபம், கற்றலின் குறைபாடு, கற்பதில் நாட்டமின்மை (படிப்பில் கவனமின்மை), கவனக்குறை, மறதிநோய் (ஞாபக மறதி பிரச்சனைகள்) தூக்கமின்மை, எண்ணச் சூழற்சி நோய், தற்கொலை எண்ணங்கள் (சிந்தனைப் பிரச்சனைகள்), மனவளர்ச்சி குறைபாடு, ஆட்டிசம், தாம்பத்ய குறைபாடுகள், பாலுணர்வு நாட்டமின்னை, குழந்தைகள் மற்றும் வளர் இளம்பிரிவனர் பிரச்சனைகள் மற்றும் குடும்ப நலப்பிரச்சனைகளுக்கு இம்மருத்துவமனையின் மூலம் மருத்துவ சிக்சையும், மனநல ஆலோசனைகளும் இலவசமாக வழங்கப்படுகிறது.

*எனவே, அரசு மனநல மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் செயல்பட்டுவரும் வெளிநோயளி சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் உள்நோயாளிகள் பிரிவில் இலவசமாக வழங்கப்படும் மருத்துவ சிகிச்சை மற்றும் மனநல ஆலோசனைகளை பெற்று பயனடைலாம். மேலும், பொதுமக்களிடையே இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இதுபோன்ற கலைநிகழ்ச்சிகள் துறை சார்ந்து நடத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் இதனை கருத்தில் கொண்டு விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில், அரசு தேனி மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையின் துணை முதல்வர் மரு.இளங்கோ, பேராசிரியர் (மன நலத்துறை) மரு.எஸ்.ஆனந்த கிருஷ்ணகுமார், உதவி பேராசிரியர் (மன நலத்துறை) எஸ்.ரெங்கநாதன், மருத்துவர்கள், மருத்துவ அலுவலர்கள் மற்றும் செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***